செய்தி வெளியீடு எண்–277 நாள்–15.04.2008

**<u>தமிழகத்தில் 6 முக்கிய மாவட்டங்களின் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு மடிக்கணினிகள் (laptop) மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி வழங்கினார்கள்</u>**

தமிழகத்தில் சென்னை, மதுரை, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 பெரிய மாவட்டங்களின் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு தலா ரூ. 50 ஆயிரத்து 319 மதிப்பிலான மடிக்கணினிகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இன்று (15.4.2008) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

2007–2008 ஆம் ஆண்டுக்கான செய்தித்துறை மானிய கோரிக்கையின் போது தமிழகத்தில் பெரிய மாவட்டங்களான மதுரை, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும் என மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி ஒரு மடிக்கணினி ரூபாய் 50 ஆயிரத்து 319 மதிப்பில் மொத்தம் ரூ. 3 லட்சத்து ஓராயிரத்து 917 மதிப்பில் 6 மடிக்கணினிகள் வாங்கப்பட்டு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கு கம்பில்லா வலைதள இணைப்பிற்கு ஒரு மடிக்கணினிக்கு ரூ. 10 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.60 ஆயிரம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் மாவட்ட தலைநகரத்திலிருந்து தொலைதூரத்தில் நடைபெறும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசு நிகழ்ச்சிகளை உடனுக்குடன் பத்திரிகை நிறுவனங்களுக்கு அனுப்பி விளம்பரப்பணிகளை சிறப்பாக மேற்கொள்ள முடியும். மடிக்கணினிகளை சென்னை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. என். தங்கையன், மதுரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எஸ்.எஸ்.சரவணன், கோயமுத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எஸ்.கண்ணதாசன், திருச்சிராப்பள்ளி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

திரு. எஸ்.பாண்டியன், சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.டி.மனோகரன் மற்றும் திருநெல்வேலி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.உல. ரவீந்திரன் ஆகியோர் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்ச்சியின் போது தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித்துறை செயலர் திரு. கோ.சந்தானம், இ.ஆ.ப, இயக்குநர் செய்தித்துறை முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப, இணை இயக்குநர் (பொ) திரு. டி. இளங்கோவன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.